**படிமம்**

படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.விளக்க வந்த ஒரு காட்சியோ கருத்தையோ காட்சிப்படுத்தி காட்டுகிற உத்தி, படிமம் ஆகும். தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாக கூறினார். காட்சி தருகிற உவமைகள், காட்சி தரா வெறும் உவமைகள் என உவமைகளை இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் காட்சி தரும் உவமைகளையே கையாண்டு உள்ளன. படிமம் காட்சி தரும் உத்தி என்பதால், காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது. அந்த வகையில் உவமை கோட்பாடு படிமத்திற்கு தோற்றுவாயாக உள்ளது.

| பாடல் |
|---|
| ‘‘**வெயில் மலைக்குச் சொரணையற்ற எருமை**<br>**குத்திட்ட பாறையாக நதிநீரில் கிடக்கும்**’’<br>- தேவதேவன்<br>**பொருள்**<br>எருமையின் சொரணை ஏற்ற தன்மையை பாறையின் ஒப்பீட்டால் படிமப்படுத்தியதால், இது ஒரு காட்சியைப் படிமப்படுத்திய கவிதை. |
| **கத்தல்களின் நெருக்கடியில்**<br>**தத்துவங்கள்**<br>**குழந்தைகள் போல்**<br>**அடிக்கடி தொலைந்து போகும்.** -ஆ. வே.முனுசாமி<br>கூச்சல்களுக்கு இடையில் நல்ல தத்துவங்கள் தெரியாமல் போய்விடுகின்றன என்ற கருத்தை குழந்தைகள் தொலைந்து போதல் என்ற உவமை மூலம் படிமமாக ஆக்கியுள்ளார் கவிஞர். |

| |
|---|
| **அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்**<br>**தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்**<br>**கடுஞ்சூழ் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்**<br>**நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்.**<br>-சிறுபாணாற்றுப்படை<br>நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஓய்மா நாட்டின்கண் உள்ள எயிற்பட்டினத்தில் தாழைமலர் அன்னம் போலவும் செருந்திமலர் பொன்னை போலவும், முள்ளி மலர் நீலமணியைப் போலவும், புன்னை மரத்தில் அரும்புகள் முத்துகளைப் போலவும் இருப்பதாகக் காட்சிப்படுத்துவதால் இது படிவம் ஆயிற்று.<br>**‘‘மாந்தோப்பு வசந்தத்தின்**<br>**பட்டாடை உடுத்தியிருக்கிறது**’’<br>**– ந.பிச்சமூர்த்தி.**<br>பூக்களும் தளிர்களுமாகப் பட்டாடையை மரம் போர்த்தியிருப்பதாகக் காட்டி அதைப் பெண்ணாக காட்சிப்படுத்துகிறது இக்கவிதை. |

| **வினைப்படிமம்** |
|---|
| ‘‘**கட்டில் நிணக்கும் இழிசினன் கையது**<br>**போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;**<br>**ஊர்கொள வந்த பொருநனொடு**<br>**ஆர்புனை தெரியில் நெடுந்தகை போரே!** ’’<br>**- புறநானூறு**<br>கட்டிலை பின்னுகின்ற ஒருவனின் கை ஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ, அவ்வளவு விரைவானது, ஊரை கைப்பற்ற எண்ணி வந்த வீரனுடன், இந்நெடுந்தொகை நடத்திய பெரும்போர் என வினையைக் காட்சிப்படுத்துகிறது இப்பாடல். |
| காலை இளம் வெயில் நன்றாக மேய<br>துன்புறுத்துத் துள்ளி வரும் புது வெயில்<br>**– கல்யாண்ஜி**<br>காலை இளம் வெயிலின் அழகை, கன்றின் செயலோடு ஒப்பிட்டுப் படிமப்படுத்துகிறது இக்கவிதை. |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| பயன் படிமம் |
|---|
| நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே<br>புண்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்<br>கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு<br>இனிய செய்தநம் காதலர்<br>இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே! – **குறுந்தொகை**<br>இனிய செய்தல், இன்னா செய்தல் என்ற பயன்களை (இனிய) நெருஞ்சிப் பூ, (இன்னா) முள் என்ற காட்சிப் பொருள்களால் படிமப்படுத்தியுள்ளது இக்கவிதை. |
| **மெய்ப்படிமம் (வடிவப்படிமம்)** |
| யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை<br>குன்றுபுகு பாம்பின் தோன்றும். – **அகநானூறு**<br>யானையின் வாய் மலைக்குகையின் வாயிப் போலவும், உணவை எடுத்துச் செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நூலையும் பாம்பினைப் போலவும் உள்ளதாகக் காட்சிப்படுத்தியமை இங்கு படிமம் ஆகிறது. |
| கோவைப்பழ மூக்கும்<br>பாசிமணிக் கண்ணும்<br>சிவப்பு கோட்டுக் கழுத்தும்<br>வேப்பிலை வாலும் – ந. பிச்சமூர்த்தி<br>இப்பாடலில் வடிவ படிவம் அமைந்துள்ளது. |
| **உருப்படிமம் (நிறப்படிமம்)** |
| வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப - அகநானூறு<br>உலை களத்தில் நன்றாக வெந்து, பின் மெல்ல மெல்ல ஆறிக் கொண்டிருக்கும் பொன்னின் நிறம் போல அந்திவானம் விளங்கிய காட்சியைப் படிமப்படுத்துகிறது. |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in